

தாயுமானவர் போற்றும் அறம்
மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவர் போற்றும் அறம்

இந்த புண்ணிய பூமியில், அறம் என்ற சொல்லாட்சியானது இன்று நேற்றல்ல ஈராயிரம் ஆண்டுகளாகவே வழங்கி வருகின்றது.

மற்ற உயிரினங்களைவிட மனிதர்களுக்கு உள்ள சிறப்பான பண்புகளில் அறமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

பண்டைய தமிழ்மக்கள் தனி மனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்ச்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர்.

"அறன் அழித்துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்" (தொல்.பொருள்.270)

என்ற தொல்காப்பியப் பாடலில் பண்டைய தமிழ் மக்கள் அறத்தைப் போற்றி வணங்கியமை உணரமுடிகிறது.

மேலும், அறத்தை - மக்கள் கடவுளாகவும் கடமையாகவும் கருதிப் போற்றியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, அறம் பற்றி தாயுமானவரின் பார்வை என்னவென்பதை இப்போது சிந்திப்போம்.

## அறம் என்றால் என்ன?

பொதுவாகவே அறம் என்னும் சொல்லுக்கு வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், ஞானம், இதம் எனப் பல பொருள்கள் அகராதியில் கூறப்பட்டாலும், "நற்பண்பு அல்லது ஒழுக்கம்" என்னும் பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது.

---

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழு நிறை வடிவே அறம்" எனவும், பிறவிதோறும மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெறிவதே அறம் எனவும் விளக்கங்கள் தரலாம்.

அறவில் என்பது, "சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் நடத்தையைப் பற்றி ஆராயும் கலை" என்றும் கூட வரையறுக்கலாம்.

## திருவள்ளுவர் காட்டும் அறம்.

அறம் என்றுசொல்லப்படுவது பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கி நடைபெறும செயல் எனவும், தன் மனத்தளவிலும், செயலிலும் குற்றமற்றவனாக ஒருவன் இருக்க வேண்டும்.

அதுவே அறம் எனவும் திருவற்றுவர் கூறுகிறார். மனத்தின் மாசைப் போக்குவதற்கு முயலுவதே அறமாகும்.

அதற்கு மனதில் பொறாமை உணர்வு, அவா, வெகுளி, ஆகிய தீய உணர்ச்சிகள் தோன்றாமல் பார்த்துக் கொள்வதோடு அந்த உணர்ச்சிகளின் உந்துதலில் கடுமையான சொற்கள் தோன்றாமல் காத்து ஒருவன் நடப்பதே அறமாகும் என திருவள்ளுவர் கூறுகிறார். இதனையே,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" (குறள் 34)

## சமணம் போற்றும் அறம்

அறக் கோட்பாடுகளைப் பற்றி மற்ற சமயங்களைவிட மிகவும் கடுமையாகவும் தீவிரமாகவும் பின்பற்றவது சமண சமயமாகும்.

சமணம் போதிக்கும் அறநெறிக் கோட்பாடகள் திரிரத்தினங்கள் எனப்படுகின்றன.

1. நல்லறிவு. 2. நன்நம்பிக்கை. 3. நன்னடத்தை, உயிர்க்கொலை செய்து தீ வளர்த்து வேள்விகள் புரிந்து வேதங்கள் ஓதி வாழ்வதும் வீண் எனவும், தாவரங்களுக்கும் உயிர் உண்டு எனவும் கூறுகிறது.
2. மேலும், நடக்கும் போதும் சுவாசித்தலின் போதும் நுண்ணுயிர்கள் கொல்லப்படக்கூடாது என்ற நோக்கில் நாசியைத் துணியால் மூடிக் கொண்டும், நடந்து செல்லும் பாதையை மயில் பீலியால் தூய்மை செய்தும் சமணத் துறவிகள் வாழ்ந்து அறத்தைக் கடைபிடித்தனர்.

## பௌத்தம் தரும் அறம்

பௌத்த சமயம் அறத்தைப் பற்றிக் கூறும் நூல்களைத் திரிபீடகம் என்று வழங்கப்படுகிறது,

இவற்றில் சுத்த பீடகம் மற்றும் வினயபீடகம் ஆகியன ஒழுகலாறுகளைப் பற்றியும், அமிதம்ம பீடகம் அறநெறிக் கோட்பாடுகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றன.

“கானா உயிர்க்கும கையற்று ஏங்கி” (மணிமேகலை.22)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக உயர்க்கொலையைப் பௌத்த சமயமும் கண்டிக்கிறது என்ற செய்தியை நாம் உணரலாம்

## பகவத்கீதை போற்றும் அறம்

“நீ உன் கடமையைச் செய். ஆனால் அந்தக் கடமையின் பலனை எதிர்பார்க்காதே” என்னும் உயரிய அறக்கருத்தை மானுடத்திற்கு கீதை புகட்டுகிறது.

# தாயுமானவர் போற்றும் அறம்.

## இறையுணர்வும் அறநெறியும்

இறையுணர்வின் வாயிலாகவே அறவுணர்வு வெளிப்படும். உள்ளத்தில் தோன்றும் இறையுணர்வு செயலாக வெளிப்படுத்துதலே அற உணர்வு.

உள்ளதை உணர்வதுான் இறை உணர்வு. நல்லதைச் செய்து அல்லதைத் தவிர்த்தல் அறநெறி.

இறைஉணர்வு என்பதைச் சரியாகப்பெற்று விட்டோமானல் நமது வாழ்க்கையேஅறநெறியாக அமையும்.

இறை உணர்வும் அறநெறியும் இணைந்த வாழ்வில்தான் தனிமனிதனுக்கு சமுதாயத்திற்கும் எல்லா வளங்களும் அமையும்.

எல்லாம் வல்ல முழுமுதல் பொருளான தெய்வ நிலையை அனுபவ அறிவாக உணர்ந்தவர்கள் அந்த அடிப்படையிலே மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்ற குறிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். அந்தக் குறிப்புகள்தான் அறம் என்று தாயுமானவர் விளக்குகின்றார்,

இறை உணர்வு இல்லையானால் அறநெறி சரியாக விளங்காது. சிந்தனை ஆற்றல் உள்ள அத்தனை பேருமே இறை உணர்வைச் சரியாகப் பெற முடியும்.

அப்படி அற உணர்வு இறை உணர்விலே இருந்துதான் அறம் தழைக்கும். அதாவது சிவம் என்ற ஒன்றை உணர்ந்தால் அன்பு மலரும்.

"ஊனம் தரும்உடலம் என்னதுயான் என்பதுஅற

ஆனந்தம் வேண்டி அலைந்தேன் பராபரமே" (பராப.118)

---

சிறுமைகள் அனைத்திற்கும் இருப்பிடமான உடலைத் தான் என்றும தனது என்றும் தன்முனைப்பு கொண்டு கருதுவதை ஒதுக்கித் தற்றி ஆனந்தமாக வாழ்வது அறம் என்கிறார்.

மனிதனது உள்ளத்திலே எழக்கூடிய தன்முனைப்பு அடங்கினால் தான் இறைஉணர்வு உண்டாகும்.

அன்பும் கருணையும் இயல்பாக மலரும் எனவும். பிறகு செய்யும் செயல்கள் அனைத்தும் அறச் செயல்களாகவே இருக்கும் என்ற தாயுமானவர் கூறுகிறார்.

இறையுணர்வு பெற அருள்தாகம் வேண்டும் என்பதை தாயுமானவர் வலியுறுத்துகிறார்.

தாயுமானவர் தம்முடைய முயற்சியால் ஒழுக்கம், அறம் ஆகியவற்றைக் காத்து ஞானநிலையைத் தன்னுடைய உள்ளுணர்வால் உணர்ந்து கொண்டார்.

தன்னுடைய வரலாற்றையே மற்றவர்களுக்கு பயன்படும்படியாக பாடல்கைளைப் பாடினார்.

இன்பம், துன்பம் என்ற நிலையைக் கடந்து, எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கொள்கையுடன் மானுடப் பணி செய்வதே தமது அருள் பணியாகக் கொண்டார்.

சாதகன் எவ்வாறு அருள்தாகம் கொண்டு இருக்க வேண்டும் என்பதை தமது அருள்பணியாகச் செய்தார்.

அருள்தாகம் எவ்வாறு அமையவேண்டும் என்பதை தன்னுடைய நிலைமைகளை எடுத்துச்சொல்லுகிறார்.

“சொல்லும் பொருளும்அற்றுச் சும்மா இருப்பதற்கே

---

அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே" (பராபர.50)

சொல்லும் அதற்குரிய பொருளும் அற்று, இரவும் பகலும் என எந்நேரமும், மௌனமாய் இருப்பதற்கே எனக்கு விருப்பம் பிறக்கிறது.

பக்தர் அருந்தும் பரமசுகம் யான்அருந்து

எத்தனைநாள் செல்லும் இயம்பாய் பராபரமே." (பராபர.270)

நின்மீது அன்புடையோர் அருந்தி மகிழும் மேலான இன்பத்தை, யான் அருந்தி மகிழ, இன்னும் எத்தனை நாள் ஆகும்? கூறுவாயாக!

எத்தனையோ கோடி எடுத்துஎடுத்துச் சொன்னாலும்

சித்தம் இரங்கிலைஎன் செய்வேன் பராபரமே." (பராபர.280)

மெய்ப்பொருள் உண்மையை, உள்ளது உள்ளபடி உணராத, பெரும்பாவி என்பதாலோ, மெள்ள மெள்ள என்னைக் கைவிட்டு விட்டாய்?

"தேடுவேன் நின்அருளைத் தேடும்முன்னே எய்தில்நடம்

ஆடுவேன் ஆனந்தம் ஆவேன் பராபரமே" (பராபர.360)

நினது திருவடியாக விளங்கும் உமது திருவருளையே எப்பொழுதும் தேடிக் கொண்டிருப்பேன். தேடும் முன்பே கிடைத்துவிட்டால், மகிழ்ச்சியால், இன்பக் கூத்து ஆடுவேன். பேரின்பமயமாய் மாறிவிடுவேன்.

"உள்ளம் குழைய உடல்குழைய உன்இருந்த

கள்ளம் குழையஎன்று காண்பேன் பராபரமே" (பராபர.361)

அகத்தவம் எனப்படும் தியானம் செய்வதால் உள்ளம் உருகவும். உடல் இளைக்கவும், மனத்தில் இருந்த வஞ்சனை நீங்கவும், ஆக இவை நிகழ்வதை எப்பொழுது காணப் போகிறேன்?

இறையுணர்வு பெற வேண்டுமானால் சாதகன் அருள் தாகம் என்ற அறத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை தாயமானவர் வலியுறுத்துகிறார்.

## உயிர் இரக்கம் (ஜீவகாருண்யம்) என்ற அறம்.

கொல்லாமை அறத்தைத் தாயமானவர் தம் பாடல்களில் அழுத்தமாக வலியுறுத்தி வந்துள்ளார்.

அனைத்து உயிர்களும ஒரே தன்மை கொண்டவை என்றும் அனைத்து உயிர்களையும் படைத்தவன் இறைவனே என்றும் தாயுமானவர் பாடல்களில் எடுத்து இயம்பியுள்ளார்.

“கடவுளின் படைப்பில் அற்பமானது என்று அலட்சியப்படுத்த ஒன்றுமே இல்லை” என்பதை மானுடத்திற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

ஓரறிவு உயிர்களான பயிர்கள் முதல் உயிர்கள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை.

எனவே அவற்றை அழிக்கும் உரிமை மனிதர்களுக்கு இல்லை என்பதையும் தாயுமானவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இப்பிறவிகள் எல்லாம் மனிதர்களின் வேறுவேறு பிறவிகள் என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

“ஊர்வன, நடப்பன, பறப்பன, செயற்கொண்டிருப்பன, என்றது எழுவகை பிறவிகளை விளங்கற்கொள்க” என்ற வடிவேலு முதலியார் அவர்களின் விளக்க உரையின் வாயிலாக இதனை அறியலாம்.

சமுதாய அறங்களுள் கொல்லாமை ஒப்பற்ற ஓர் அறமாகப் பல இலக்கியங்கள் வலியுறுத்தி வந்துள்ளன.

"மன்னுயிர்கள் எல்லாம் நன்னுயிர் போன்று கருதுகின்றவன் நல்லொழுக்கத்திலும் நல்வாழ்விலும் படிப்படியாக மேலநோக்கிப் போய்விடுகிறான்" என்று தாயுமானவர் மானுடத்திற்கு அறிவுறுத்திக் கூறியுள்ளார்.

"கொல்லாமை எத்தனை குணக்கேட்டைநீக்கும், அக்

குணம் ஒன்றும் ஒன்றிலேன்பால்,

கோரம்எத் தனை, பசஷ பாதம்எத் தனை, வன்

குணங்கள்எத் தனை, கொடியபாழ்ங்

கல்லாமை எத்தனை, அகந்தை எத் தனை, மனக்

கள்ளம்எத தனை, உள்ளசற்

காரியம் சொல்லிடினும் அறியாமை எத்தனை.

கதிக்குஎன்று அமைத்தஅருளில்

செல்லாமை எத்தனை, விர்தாகோஷ்டி என்னிலோ

செலர்வதுஎத் தனை, முயற்சி

சிந்தைஎத் தனை, சலனம இந்த்ரஜா லம்போன்ற

தேகத்தில் வாஞ்சை முதலாய்

அல்லாமை எத்தனை அமைத்தனை, உனக்கு அடிமை

ஆனேன், இவைக்கும்ஆளோ?

அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி

ஆனந்தம் ஆனபரமே! (தாயு.பா.67 ஆனந்தமானபரம் 1)

என்ற பாடலில் இறைவனைப் போற்றிப் பாடியுள்ளார்.

அண்டமாகியும், பிண்டமாகியும் இருப்பவன் என்றும், அரிய உயிர்க்கு உயிராயும் அமர்ந்திருப்பவன் என்றும் பாடியுள்ளார்.

அனைத்து உயிர்களுக்குள்ளும் இறைவன் இருக்கின்றான் என்பதை வலியுறுத்துவதன் மூலம் அனைத்து உயிர்களையும் மதித்துப் போற்ற வேண்டும் என்பதை எடுத்துரைப்பது தாயுமானவரின் நோக்கமாகும்.

"கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க

எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே" (தா.பா.689.பரா.53)

என்ற பாடலில் கொல்லாமை அறத்தை அகிலம் முழுவதும் எடுத்துரைப்பதே எனக்கு விருப்பமான பணி என்று கூறியுள்ளார்.

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்று

அல்லாதவர் யாரே அறியேன் பராபரமே" (தா.பா.689.பரா.192)

என்ற பாடலில் கொல்லாமை விரதத்தை மேற்கொண்டு வாழ்பவரே நல்லவர்கள்.

கொல்லாமை விரதத்தை மேற்கொள்ளாதவர்களை யாரென்று கூறுவேன் என்ற கேள்வியின் மூலம் அவர்கள் மனிதர்கள் அல்லர் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**கொலைகளவு கட்காமம்** கோபம் விட்டாலன்றோ

மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே" (தா.பா.)

என்ற பாடலில் கொலை, களவு, மது, காமம், கோபம் ஆகிய கொடிய பண்புகளை விட்டால் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதையும் தாயுமானவர் எடுத்து உரைத்துள்ளார்.

கொல்லாமை அறத்தை வலியுறுத்துள்ள தாயுமானவர் உயிர்களிடம் அன்பு காட்ட வேண்டும் என்பதையும் பல பாடல்களில் அழுத்தமாக பதிவு செய்துள்ளார். இதை

"எவ்வுயிரும் தன்உயிர் போல் எண்ணும் தபோதனர்கள்

செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்பது எந்நாளோ?" (தா.பா.689.பரா.192)

என்ற பாடலில் அனைத்து உயிர்களையும் தமது உயிர் போல் எண்ணி அன்பு காட்ட வேண்டும்.

இதுபோன்ற நல்ல அறிவை இறைவன் எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றார்.

மண்ணில் வாழும் உயிர்கள் அனைத்தும் இன்பமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது மட்டுமே அலலாமல் வேறு எதுவும் வேண்டாம் என்று இறைவனிடம் வேண்டியுள்ளார் தாயுமானவர்.

இவ்வாறு கொல்லாமை அறத்தையும் அனைத்து உயிர்களின் மீது அன்பையும் தாயுமானவர் தம் பாடல்களில் வலியுறுத்தி உள்ளார்.

## மன ஒழுக்கம் என்ற அறம்

சாதகன் தன்மனதை அறிந்த கொண்டு, அதனை மனம் அற்ற இடமாக மாற்றி வாழ வேண்டும் என்று மன ஒழுக்கத்தை தாயுமானவர் பல இடங்களில் வலியுறுத்துகிறார்.

"மத்தாந்த வித்ததே முளைக்குநில மாய்எழுந்த

சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே" (பராபர.65)

முத்தி நெறி முயல்வது வாழ்க்கையின் மேலாம் குறிக்கோள். மனமானது தன்னை உலக வாழ்வினின்று விடுவித்து கொள்வதும்

பரநாட்டத்தில் சதா ஈடுபட்டிருப்பதும் முக்தி மார்க்கமாகும். இதுவே வித்து ஆகும்.

முக்தி நெறி என்னும் வித்தை விதைப்பதற்கரிய பூமி சித்தாந்த மார்க்கம் ஆகும். அதாவது, முக்தி பெற விழைபவன் தன் இயல்பிற்கு உகந்த சமய அனுஸ்டானத்தில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

முக்தி என்னும் வித்தும், சித்தாந்தம் ஆகிய சமயநெறியுமாக விளங்குவது பரம்பொருளாகிய நீயே.

“தானேஆம் நன்நிலையைத் தந்த அருள் ஆனந்த

வானே மானாதீத வாழ்வே பராபரமே.” (பராபர.370)

மனதின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரபஞ்ச வாழ்வில் இன்பமும் துன்பமும் சேர்ந்தே அமைந்துள்ளன.

மனம் போன இடத்து இருப்பதோ ஆனந்த சொரூபமாகிய சிதாகாசம். அதுவே எனத நிஜ சொரூபம் - தானே ஆம் நன்னிலை. அதுவே ஆனந்த வான். அதில் தோய்நதிருப்பதே எனது குறிக்கோள்.

இறைவா, என்னுடைய ஜீவ போதத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு உன்னுடைய அகண்ட சச்திதானந்த சொரூபத்தில், மனம கடந்த பெருநிலையில், நிலைத்திருப்பேனாக.

## தாயுமானவர் தரும் தியானமும் ஒழுக்கமும்

உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பாராமல்
என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே (தா.பா..பரா.)

இறைவா,உன்னை சிங்காரித்து அழகு பார்க்காமல் என்னை சிங்காரித்து கொண்டு இருந்து விட்டேனே என்கிறார் தாயுமானவர்.

சரி.இதில் என்ன பிரமாதம். இதில் என்ன பெரிய கருத்து இருக்கிறது என்று நினைக்கிறீர்களா ?

தாயுமானவர், மிக பெரியவர். உண்மை உணர்ந்த ஞானி.

ஏன் இறைவனை அலங்கரிக்கிறோம் ? ,கோவிலிலும் சரி, வீட்டிலும் சரி இறைவனின் சிலையை, படத்தை துடைத்து,அபிஷேகம் பண்ணி, பூவாலும்,சந்தனத்தாலும், தங்க நகைகளாலும் ஏன் அலங்காரம் பண்ணுகிறோம் ?

இறைவன் பவனி வரும் பல்லக்கு,தேர் போன்றவற்றையும் நாம் அலங்காரம் பண்ணுகிறோம்...ஏன் ?

இறைவன் நம்மை கேட்டானா ? என்னை அலங்காரம் பண்ணு என்று இறைவன் கேட்டானா ? இல்லையே ...பின் எதற்கு அந்த அலங்காரம் ?

மனித மனம் அலைபாயக் கூடியது.ஒரு இடத்தில் நில்லாதது. அதை ஒரு இடத்தில் நிலைக்க வைக்க வேண்டும் என்றால் அதற்கு தியானம் தேவை.

மனக் கட்டுப்பாடு அவ்வளவு எளிதில் வருவது இல்லை.

முதலில் மனதை ஒன்றின் மேல் படிய , பதிய வைக்க வேண்டும். மனம் அதில் இலயிக்க வேண்டும். அதிலேயே கலக்க வேண்டும்.

அதற்கு நம் முன்னவர்கள் கண்ட வழி அலங்காரம்.

கோவில் நமது அனைத்து புலன்களுக்கும் இன்பம் தரும்படி அமைத்தார்கள்.

காதுக்கு இனிமையாக பாடல்கள், நாதஸ்வரம்,சொற்பொழிவுகள்

---

என்றும்,

மூக்குக்கு இனிமையாக கற்பூரம்,ஊதுபத்தி, மலர்கள் என்றும்,

நாவுக்கு இனிமையாக பிரசாதம் என்றும்,

உடலுக்கு இனிமையாக நந்தவனக் காற்றும்,

கண்ணுக்கு இனிமை தர கோவில் சிற்பங்கள், பெரிய கோபுரங்கள், அழாகன மூர்த்தி வடிவங்கள்,அந்த சிலைகளுக்கு அலங்காரம் என்று வைத்தார்கள்.

இறைவனை எவ்வளவுக்கு எவ்வளவு அலங்காரம் பண்ணுகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நம் கண்ணுக்கு இனிமை.

நம் குழந்தைகளுக்கு நாம் புதிது புதியதாய் ஆடை அணிகலன்கள் அணிவித்து பார்த்து மகிழ்கிறோம் அல்லவா ...அது போல்.

குழந்தைகளுக்கு அலங்காரம் பண்ணுவது நாம் கண்டு மகிழ.

மனைவிக்கு பட்டுச் சேலை வாங்கித் தந்து அழகு பார்க்கிறோம்,அவளுக்கு நகை அணிவித்து அழகு பார்க்கிறோம்....

அப்படி அழகை இரசிக்கும் போது மனம் இலயிக்கிறது ...மனம் ஒன்று படுகிறது. ஆவல் எழுகிறது.

ஒன்றை இரசிக்கும் போது, இரசிப்பின் உச்சத்தில் கண்ணை மூடி கொள்கிறோம்...கண்ணை மூடி இரசிக்கிறோம்...அது சிறந்த உணவாக இருக்கட்டும், சிறந்த இசையாக இருக்கட்டும், நல்ல நறுமணமாக இருக்கட்டும் ...இரசனையின் உச்சம் கண் மூடி உள்ளுக்குள் அதை

---

.அனுபவிக்கிறோம்..

இறைவனை, அவன் உருவத்தை சிங்காரம் பண்ணி பார்க்கும் போது , அதில் இலயித்து அதை அப்படியே மனதில் காண்போம்.

அது தியானம். உருவத்தில் இருந்து உருவம் இல்லா அந்த சக்தியை அறிவதுதான் தியானம்.

எனவே, உன்னை சிங்காரித்து அழகு பார்க்காமல் , அழியும் இந்த உடலை அலங்காரித்து இருந்து விட்டேனே என்கிறார் தாயுமானவர்.

தியானம் செய்வதன் வாயிலாகத் தனிமனித ஒழுக்கம் பேணப்படுவதோடு மட்டுமின்றி சமுதயாம் முழுமையும் அமைதி நிலவ வழி கோலுகிறது.

## எண்ணத்தில் ஒழுங்கு பேணுவதும் அறம்தான்.

“எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்

பண் ஆகச் செய்ததுஇனிப் போததும பராபரமே.” (பராபர.35)

அறிவிலியாகிய இந்த ஏழையின் மனம், நினைக்கக் கூடாதவற்றை எல்லாம் நினைத்து, புண் ஆகிப் போனது. அந்த நிலை இனிப் போதும். (இனிமேலும் தொடர வேண்டாம்.)

“எண்ணம் எங்கும் செல்லும் வல்லமையது. விழிப்புத் தவறும் போது அது அசுத்தத்திலும் செல்லும். அப்படித் தோன்றும் தவறான எண்ணங்களை வழிப்பு நிலையில் இருந்து தவிர்க்கவேண்டும்.
அதற்கு ஒரே வழி தான் உண்டு. நல்ல எண்ணங்களை – நாமே விரும்பி, முயன்று – மனதில் இயங்க விட்டுக் கொண்டிருக்க வேண்டும்.”

---

"எண்ணத்தின் அளவையொட்டியே மனதின் தரமும், உயர்வும் அமைகின்றன. மனதின் அளவில்தான் மனிதனின் தரமும், உயர்வும் உருவாகின்றன.

எனவே, எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும். எண்ணத்திற்கு உயர்வூட்ட வேண்டும். எப்படி? எண்ணத்தைக் கொண்டு தான் எண்ணத்தைப் பண்படுத்த வேண்டும்.

எண்ணத்தின் தன்மையைப் பயன்படுத்தித் தான் எண்ணத்திற்கு உயர்வூட்ட வேண்டும்."

"தூய்மையான நல் எண்ணங்களை மேற்கொண்டால் உங்களிடமிருந்து இனிய அதிர்வுகள் புறப்பட்டு வெளியேறிப் பரவுகின்றன

அதே போன்று நீங்கள் ஒருவரை வாழ்த்த நினைக்கும் பொழுது உங்களை அறியாமல் நீங்களே முதலில் உங்களால் வாழ்த்தப் படுகின்றீர்கள்!

வாழ்த்து உங்கள் மனதில் ஆழப் பதிந்து விடுகின்றது.

அதுபோலவே நீங்கள் ஒருவருக்குத் தீமை நினைத்துச் சபிக்கும் பொழுது முதலில் உங்களை நீங்களே கெடுவதற்குச் சபித்துச் கொள்கிறீர்கள்.

உங்களிடம் முதலில் தீமை வித்து உங்களிடம் ஊன்றிப் பிறகு மற்றவர்களுக்குப் பரவுகின்றது. இதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்."

இவ்வாறு தாயுமானவர் தனிமனிதர்களுக்கு மட்டுமல்லாது சமுதாயம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய அறக் கருத்துக்களையும் வாழ்க்கை நெறிகளையும் வழங்கியுள்ளார்.

தாயுமானவரது சிந்தனையானது மற்ற அறிஞர்களின் சிந்ததனையிலிருந்து மாறுபட்டு புதுமையான வண்ணமும் போற்றக் கூடியதாகவும் திகழ்கிறது.

தாயுமானவர் போற்றும் அறக்கருத்துக்களைக் கடைபிடித்து அற வழியில் சென்று ஆனந்தமாக வாழ்வோமாக! ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!